# 19 திருக்கோணேச்சரம்

இலங்கையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள எழில் நிறைந்த நகரம் திருகோணமலையாகும். அங்குள்ள சுவாமி மலை எனப்படும் உயர்ந்த மலைப்பகுதி யில் திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது. இலங்கையில் உள்ள தொன்மை வாய்ந்த சிவ ஆலயங்களுள் இந்த ஆலயமும் ஒன்றாகும்.

திருக்கோணேச்சர ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்பு மிகுந்தது. இத்தலத்தில், இறைவன் கோணேச்சரர், இறைவி மாதுமையாளுடன் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இத்தலத்தின் தீர்த்தம் **பாவநாசம்** என்பதாகும். தலவிருட்சமாக **கல்லாலமரம்** விளங்குகின்றது.

இலங்கையில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் திருக்கோணேச்சரமும் ஒன்றாகும். இத்தலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற சிறப்பினை உடையது. அவ்வாறே, அருணகிரிநாதரும் இத்தலத்தின் மீது திருப்புகழ் பாடியுள்ளார்.

இந்த ஆலயத்தின் வரலாற்றைப் புராண, இதிகாசக் கதைகள் ஊடாக அறியலாம். முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட சிவபக்தனான இராவணன் என்னும் மன்னனது இஷ்ட தெய்வமாக திருக்கோணேச்சரர் விளங்கினார் என்றும் அந்த மன்னன் தினமும் இவ்வாலயத்திற்கு வந்து பூசித்துச் சென்றான் என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.



திருக்கோணேச்சர ஆலயம் மனுச்சோழ மன்னனால் கட்டுவிக்கப்பட்டதென்றும், அவன் மகன் குளக்கோட்ட மன்னனால் மிகுதித் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டன என்றும் வரலாறுகளால் அறியக்கூடியதாக உள்ளது. குளக்கோட்ட மன்னன் ஆலயத்திற்கென காணிகளை வழங்கியதுடன் ஆலயத் தொண்டிற்காகப் பல ஊழியர்களையும் நியமித்தான் என இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் குறிப்படுகின்றன.

பின்னர், இவ்வாலயம் இலங்கையை ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது காலங்களில் பெரும் அழிவுக்குள்ளாகியது. இதனால், கோணேச்சரப் பெருமானின் அடியார்கள் விக்கிரகங்களையும் பிற பொருட்களையும் நிலத்தின் கீழ் மறைத்து வைத்து மனத்தாலே வழிபாடு செய்தனர். 1950 ஆம் ஆண்டிலே பல விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அத்துடன், சைவ அடியார்களின் முயற்சியால் மீண்டும் புதிய கோயில் அமைக்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டில் அவ்விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு, மகாகும்பாபிஷேகமும் இடம்பெற்றது.

இந்த ஆலயத்தில் ஆகம முறைப்படி பூசைகள் இடம்பெறுகின்றன. மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, 18 நாட்களுக்கு நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில் சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

**தாயினும் நல்ல தலைவரென் றடியார்**
**தம்மடி போற்றிசைப் பார்கள்**
**வாயினும் மனத்தும் மருவிநின் றகலா**
**மாண்பினர் காண்பல வேடர்**
**நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி**
**நுழைதரு நூலினர் ஞாலங்**
**கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த**
**கோணமா மலையமர்ந் தாரே.**

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. திருக்கோணேச்சர ஆலயம் எங்கே அமைந்துள்ளது?
2. திருக்கோணேச்சர ஆலயத்தின் மீது தேவாரம் பாடிய நாயனார் யார்?
3. இவ்வாலயத்துக்குத் திருப்பணி செய்த மன்னர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. திருக்கோணேச்சர ஆலய மகோற்சவம் எப்போது நடைபெறும்?

**02. கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருக்கோணேச்சர ஆலயத்தின் இறைவன் ................................... இறைவி ................................. ஆவார்.
2. பாபநாசம் என்பது திருக்கோணேச்சர ஆலயத்தின் ................................. ஆகும்.
3. திருக்கோணேச்சர ஆலயத்தின் தலவிருட்சம் ................................. ஆகும்.
4. திருக்கோணேச்சர ஆலயத்தின் மீது ................................. திருப்புகழ் பாடியுள்ளார்.

## செயற்பாடு

1. திருக்கோணேச்சர ஆலயத்தின் மீது பாடப்பட்டுள்ள வேறு தேவாரம் ஒன்றை மனனம் செய்து அதனை வகுப்பறையில் ஓதிக்காட்டுக.

### பாடச்சுருக்கம்

- திருக்கோணேச்சர ஆலயம் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புமிக்கது.
- இத்தலம் புராண, இதிகாச கால பழமை வாய்ந்தது. இது தேவாரம், திருப்புகழ் பாடப்பெற்ற தலமாகும்.
- இவ்வாலய மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும்.